பதிப்புரிமை
முதற் பதிப்பு : 1959.
இரண்டாம் பதிப்பு : 1963

விலை ரூ. 2·00

சுதந்திர நிலைய வெளியீடு—2

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-14.

நிலாப் பிஞ்சு

# முன்னுரை

இளந்தமிழா எழுந்திரு என்று கூவினேன். மின்னல் பூவை அவன் கைகளிலே கொடுத்தேன். இல்லை,

உள்ளத்து மின்னல் பூச்செண்டு கட்டி
வெள்ளத்தில் எங்கோ விளையாட விட்டேன்.

மின்னல் பூவுக்கு வெள்ளத்தை எதிர்த்து நீந்தவேண்டிய அவசியம் ஏற்படவில்லை, தமிழன் தனது கரங்களிலே அதை ஏற்றுக்கொண்டதால்.

இப்பொழுது நிலாப் பிஞ்சை எட்டிப் பறித்து வழங்குகிறேன். நீலவானக் கடலிலே நிலாப் பிஞ்சு ஒரு எழில் தோணி. கவிதைத் தேன் பருகும் தேவதைகள் அதில் அமர்ந்து அற்புதக் காட்சிகளைக் காண்கிறார்கள். காதலர்களும், யோகிகளும் அதைச் செலுத்தி விளையாடுகிறார்கள். யோகிகளின் தலைவனாகிய கைலைநாதன் கடல் நஞ்சைக் கண்டத்திலணிந்து பிறையமுதம் பருகுகின்றான். ஆன்ம தரிசனப் பாதையிலே ஏற்படும் இன்பத்திற்குப் பிறை நிலா ஒரு அழகிய சின்னம். குண்டலிப்பால் அருந்துவதற்கு அது ஓர் உருவகம்.

கலந்தவர்க்கினியதோர் கள்ளாக மலர்வது நெடு நிலா. அதன் பிஞ்சாகிய பிறை காதல் துளிர் விடுவதற்குக் கொம்பு பிடிக்கிறது. வாழ்க நிலாப் பிஞ்சு.

சொந்த அனுபவத்தால் அல்லது காட்சியால் எழுவது கலை; தன்மயம் அதன் உயிர். கவிதை இந்த விதிக்கு மாறுபட்டதன்று. இக்காலத்துக் கவிஞர்கள் சிறப்பாகத் தமது மனப் போராட்டங்களையும், காட்சிகளையும் கவிதைகளில் வடிப்பதன்மூலம் இன்றைய மக்கட் கூட்டத்தின் உணர்ச்சிகளையும், சமூகப் பிரச்சினைகளையும் வெளியிட முயல்கிறார்கள்.

மக்கட் கூட்டத்திலே ஒரு அங்கமாக உள்ளவன்தானே கவிஞன்? அவன் வெறும் அங்கம் மட்டுமன்று. உள்ளும் புறமும் எழுகின்ற காட்சிகளை நுட்பமாகக் கவரும் ஆற்றலுக்கு அவன் வடிவமாக உள்ளான்.

இன்றைய உலகம் விஞ்ஞான முன்னேற்றததால ஏற்றம் பெற்றது. அதே விஞ்ஞான முன்னேற்றத்தால் கலக்க

மடைந்திருப்பது. மனித இனத்தின் வாழ்வு திடீரென்று இறுதியெய்திவிடுமோ என்ற ஐயம் நிறைந்தது. அதன் காரணமாக எங்கும் ஓர் அமைதியின்மை. வாழ்வின் குறிக்கோள் யாது என்ற கேள்வியிலே ஒரு புதிய பிடிப்பு. கவிஞன் ஊசலாடுகிறான்; தவிக்கிறான்; துடிக்கிறான். தத்துவ சாஸ்திரியும், சிந்தனையாளனும் இந்த நிலையில் உள்ளார்கள். ஆனால் அவர்கள் கேள்வியை நோக்கும் வழி வேறு.

மேலை நாட்டுப் புறவேகத்தைவிடக் கீழைநாட்டு அமைதி, அகநோக்கு மேன்மையுடையது என்ற கருத்து மெதுவாக ஆங்காங்கு முளைவிடுகிறது. இரண்டையும் பிணைத்து ஒரு புதிய, அச்சமற்ற, ஐயமற்ற வாழ்க்கைப் போக்கைச் சமைக்கலாகுமோ என்ற கேள்வியும் கூடவே எழுந்துள்ளது. புத்தர், இயேசு கிறிஸ்து, இராமகிருஷ்ண பரமஹம்சர், இராமலிங்க வள்ளலார், ரமண மகரிஷி போன்றவர்கள் காட்டும் பாதையிலே தான் உண்மையான அமைதியும், சாந்தியும் இருக்கின்றன வென்ற ஒரு விழிப்பும் பிறந்துள்ளது. இந்த விழிப்பை உலக அரங்கிலே காணலாம்.

நமது நாட்டு அரங்கிலே ஒரு குழப்பமான நிலைமை. மேலை நாடு விஞ்ஞான முன்னேற்றத்தைக் கண்டு ஒரு மலைப்பு. அந்நாட்டு முறைகளை அப்படியே பின்பற்ற வேண்டும் என்ற ஆவல் ஒரு பக்கம். இந்த ஆவலை எதிர்த்துப் பழம்பெருமையைச் சுட்டிக்காட்டி நிதானமாக ஆழ்ந்து சிந்தனை செய்து முடிவு செய்யுமாறு எச்சரிக்கை ஒரு பக்கம். ஆகவே குழப்பமும் போராட்டமும்.

பழமையிலே கால் ஊன்றாத புதுமை வேகம் ஒருபுறம் இந்தப் புதுமையின் வலிமையெல்லாம் மேல்நாட்டைப்பற்றி எழுத்து மூலமாக மேற்போக்காகத் தெரிந்த கருத்துக்களே. கலை முயற்சியிலும், இலக்கியச் சோதனைகளிலும் இதன் பிரதிபலிப்பைக் காணலாம். விடுதலை பெற்ற நாட்டிலே பலவேறு கருத்துக்களின் மோதுதலால் ஏற்பட்ட முன்னிருட்டு வேளை இது.

புதிய பாரத சமுதாயத்தை எவ்வாறு உருவாக்குவது என்பதிலே இன்னும் தெளிவு பிறக்கவில்லை. மேற்கும் கிழக்கும் இழுக்கின்றன. அடிப்பீடம் உறுதியோடு நிற்குமானால் அவற்றின் இழுப்பால் நமக்கு நன்மையே உண்டாகும். ஆனால் அடிப்பீடத்தைப் பற்றிய அறிவு குறைவு. பல நூற்றாண்டுகளாக அதை மெதுவாக மறந்து வந்திருக்

கிறோம். ஏதோ பற்றுதல் காரணமாக வெறும் பேச்சு முழங்குவதை அடிக்கடி கேட்கிறோம். அந்த முழக்கத்தின் அடிநிலையிலே ஆழ்ந்த நிச்சயமோ தெளிவோ இல்லை.

வேறொரு குழப்பமும் இன்று தலையெடுத்திருக்கிறது. நாட்டின் ஒருமையைப் பலப்படுத்துவதிலே ஒரு பெரிய ஆசை. இது நியாயமான ஆசை. ஆனால் இந்த ஆசை நாட்டுப் பகுதிகளின் இயல்பான தனித்தன்மையோடு மாறுபடுகிறது. மொழி, கலை, பண்பாடு, பழக்கவழக்கம் ஆகிய எல்லாத் துறைகளிலும் இந்த மாறுபாட்டைக்காண்கிறோம். இரண்டும் இரண்டு கண்கள். ஒன்றைக்குத்தி ஒன்று வளம் பெறாது. ஆனால் இரண்டையும் வளப்படுத்தி அழகு பெறப்பார்க்கும் சமநிலை, பரந்த நோக்கு, தெளிவுஇன்னும் ஏற்படவில்லை. ஆகவே குழப்பம், மோதல், ஐயம், அச்சம், கசப்பு, ஏமாற்றம். இந்நிலை நமது முன்னேற்றத்தில் ஒரு வழுக்கலான படி. இதைத் தாண்டி எளியான பாதையில் உறுதியோடு அடி வைப்போம் என்பது என்னுடைய நம்பிக்கை. அதற்கு வேண்டிய அடிப்பீட வலிமை இருக்கிறது என்பதை நான் திட்டமாக உணர்கிறேன். அசைந்து கொடுத்தாலும் ஆணிவேர் பலமாக இருக்கிறது.

இந்த உணர்ச்சியோடு கவிதை பிறக்கின்றது. பிரச்சினைகளுக்குச் சாதகமாகவோ பாதகமாகவோ எழுதுவதுதான் கவிதை என்பது தவறு. வெறும் பிரசாரம் இலக்கியமன்று; கலையுமன்று. ஆனால் பிரசாரத்தைத் தாங்கி நிற்பவையெல்லாம் இலக்கியமல்ல என்பதும் தவறு. கலைப்படைப்பாக ஒன்று உருவாகியுள்ளதா என்பதே கேள்வி. பிரச்சினைகளுக்கு இன்று ஒருவன் தப்ப முடியாது. அவை எல்லோரையும் பற்றிக்கொண்டிருக்கின்றன.

சகடக்காலைப்போலச் சமூகம் உயர்ந்தும் தாழ்ந்தும் வரும் என்பதை நான் ஒப்புக்கொள்ளுவதில்லை. சகடக் கால்கள் ஏறியும் மாறியும் உருளலாம்; ஆனால் தேர் ஒரு பாதையிலே முன்னேறிப் போகிறது. சமூகங்கள் ஏற்றத் தாழ்வுகள் பெறலாம். மனித இனம் என்கிற தேர் முன்னேறியே செல்கிறது. [illegible] மெதுவாக இருக்கலாம்; அந்த வேகமும் இடையிடையே [illegible]லாம்; தடுமாறலாம். ஆனால் முன்னேற்றம் உண்மை.

[illegible] நம்பிக்கை அளிக்கிறது. அதிலே வளர்ச்சி உண்டு. [illegible] நிச்சயம் உண்டு.

கருமேகங்கள் மறைக்கலாம்; பொலிவு குன்றுவது போலத் தோற்றமளிக்கலாம்; ஆனல் வளர்ச்சி நின்றுவிடுவதில்லை. நிலவின் வளர்ச்சியிலே நிறைவிற்குப் பின் தேய்வுண்டு. மனித இனத்தின் வளர்ச்சியிலே நிறைவிற்குப்பின் நிறைவே. இங்கே நிறைவு என்பது வீட்டு நிலை. இந்த நிறைவிலே பின்னமுமில்லை.

தேயும்படி சாபங்கொடுக்க வேறு தக்கன் யாருமில்லை. மனிதனே வளர்பவன். அவனே தக்கன். தன்னுள்ளிருக்கும் தக்கனை விரட்டியடிக்கும் பேராற்றல் மனிதனிடத்திலே ஓங்கி நிற்கவேண்டும், அப்பொழுது அவன் வாழ்வு காதலாக ஆன்ம ஒளியாக, இடையருத இன்ப ஊற்ருக மலரும். இதுவே கவிஞனின் கனவு.

குறிப்பு:—இந்த இரண்டாம் பதிப்பைப் பற்றி ஒரு சொல். இதில் முன்புள்ள கவிதைகளோடு எட்டுப் புதிய கவிதைகளும் இடம் பெறுகின்றன.

பெ. தூரன்.

நெஞ்சமெனும் பாற்கடலில்
நிமிர்ந்துசுருள் திரைவடித்துப்
பிஞ்சுநிலாக் கிண்ணியிலே
பெய்துவைத்தேன் கவியமுதம்
அஞ்சிநிலாக் கற்பனையாம்
அனற்புரவிப் பிடர்த்தாவிப்
பஞ்சகதி வான்வெளியில்
பாய்ந்திட்டே சுவைத்திடுவீர்

# உள்ளுறை


| | |
|---|---|
| உன் குரல் | 9 |
| உறங்கிடலாமோ | 10 |
| புது வாழ்வு | 11 |
| உறக்கமே துறக்கம் | 12 |
| கருணை | 13 |
| தோற்றம் | 14 |
| இணையிலாக் காதலன் | 15 |
| வாழிய உலகம் | 16 |
| நிலாப் பிஞ்சு | 17 |
| கடிதம் | 19 |
| காலவெளி | 21 |
| பூவிழுந்தபோது | 23 |
| நான் மறவேன் | 26 |
| மலர் | 29 |
| நிலா | 30 |
| புத்தாண்டு | 31 |
| காதலிக்கு மாலை | 33 |
| நீ | 34 |
| ஓங்குக சுடர் | 36 |
| கணக்கறுமே | 38 |
| அறிவிப்பு | 40 |
| மண்ணுடும் பொன்னுடாரம் | 42 |

எத்தனை இன்பமடா! 44
பொட்டு நிலா 46
வேண்டும் 48
தழை மறைவினில் 49
தேவி பராசக்தி அன்னை ... 51
இளந்தாய் ... 52
நீங்கா இருள் ... 54
வடிநீர்க் கண்கள் ... 55
பொன் வண்டு ... 56
வாழிய ... 57
மழை கண்ட மயில் ... 58
மகிழ்வேன் ... 59
கெண்டை மீன் .. 61
பாட்டு ... 62
சோதியே சுடரே ... 63
சந்திப்பு ... 66
சத்தியம் ஒன்றே ... 67
ஒளியைப் பார் ... 68
வீர சுதந்திரம் ... 69
ஓ மீகாமா ... 70
எழு கடலும் ... 71
அழகும் அன்பும் ... 72
காதல் அனல் ... 73
வேல் ... 74
ஓடக்காரன் ... 76
துரிய நிலை ... 79
ஜய ஹிந்த் ... 80

# உன் குரல்

எத்தனையோ சொல்மாரி
எத்தனையோ புலமையுரை
எத்தனையோ நூல்விளக்கம்
எனைக்குழப்ப மிகவலுத்தேன்
எத்தனையோ திருத்தலங்கள்
எத்தனையோ தீர்த்தங்கள்
எத்தனையோ மூர்த்தங்கள்
அத்தனையும் பார்த்தயர்ந்தேன்;
வானவெளித் தாரகையில்
வளர்நீல வாரிதியில்
மோனமலைக் காட்சியினில்
முகையவிழும் மலர்வனப்பில்
உன்குரலைச் செவிமடுக்கும்
உணர்வின்றி அலமந்தேன்
என்னிருளைப் போக்கவினி
ஏதுசெய்வாய் அன்பொளியே

# உறங்கிடலாமோ

உறங்கிடலாமோ—நீதான்
ஓடி அகக் கதவை
நாடித் திறந்திடாமல் (உறங்கிட)

கறங்குபோல் வாழ்வினில்
காலமெலாம் சுற்றி
அறங்கெட வாழ்ந்துபின்
அனலிடை மறைவதோ (உறங்கிட)

பிறவியெடுத்த பயன்
பெறுவதே அறிவாம்
பேதமை இருள்ஓடப்
புரிவதே நெறியாம் (உறங்கிட)

மறலியை வென்றவர்
மாண்புடை யோரராம்
மானிட தேகத்தின்
குறியிதுவே யாம் (உறங்கிட)

விழிப்புடன் வாழ்ந்தவர்
வென்றியே பெறுவார்
சுழிப்பிலா அமைதியாம்
சுகநிலை யெய்துவார். (உறங்கிட)

# புது வாழ்வு

வானமெல்லாம் திரைச்சீலை மனக்கனலே —
வண்ணங்கள்
கூனியில்லா ஒருகுடும்பக் குறிக்கோளாம்
தூரிகையில்
நவநவமாய்க் கற்பனையை நனவாக்கும் ஓவியங்கள்
புவியெல்லாம் போர்த்திடவே புதுவீடு
படைத்திடுவோம்
அணுப்பொறிகள் அடித்தொண்டர் அன்பொன்றே
ஆயுதமாய்
பிணிக்குறையும் பஞ்சமெனும் பேய்ச்சிறுமை
யில்லாமல்
இன்பமொன்றே எங்குமென எல்லோரும் கேளிரென
நன்மையொன்றே செய்திடவே நயம்சிறந்த
போட்டியெழ
மேபாங்கவரும் புன்னகையும் புரையில்லா
மெய்மொழியும்
பங்கமில்லாப் பெருவாழ்வும் பாரென்னும் வீடுதனில்
நாட்டிடவே எழுந்திடுவீர் நாற்றிசையும்
விரைந்திடுவீர்
நாட்டமெலாம் குறிக்கோளில் நலமெல்லாம்
பெருக்கிடுவீர்
பிரிவுகளும் பூசல்களும் பேதமையாம் சுயநலமும்
குறுநெறியும் வஞ்சனையும் குள்ளநரிச் சூழ்ச்சிகளும்
பொடிபடவே முனைந்திடுவீர் புதுவாழ்வு
தோன்றிடவே
திடமாக முன்செல்வீர் ஜெயபேரி ஒலித்ததுபார்.

# உறக்கமே துறக்கம்

கொஞ்சினார் குழைந்தேன்; கொதித்திடும் அன்பினா
கெஞ்சினார் மிழற்றினார்; உள்ளம் கிளுகிளுத்
தரணெனும் நாணம் அஃசவும் துறந்தேன்;
சரணெனத் தம்மையே அர்ப்பணம் புரிந்திடும்
அடியரின் பான்மையில் அலம்பணி மார்பக்
கடிமிகு கோட்டையின் கபாடம் விடுத்தேன்;
கவ்விடுங் காதல் கண்வழிக் கன்றிடச்
செவ்விதழ் சுவைத்துச் செவியணி தொட்டுக்
கன்னப் பட்டினைக் கழுத்துவெண் சங்கினை
மன்னிய திருவுடை மலர்க்கரம் துழாவினார்;
நெஞ்சகம் விம்மிட நிமிர்ந்தேன்; ஐயகோ
வஞ்சகக் கனவின் மாயைதான் இதுவெனக்
கொஞ்சம் முன்புநான் குறிப்பறிந் திருப்பின்
துஞ்சரித் தெழுவனோ தூக்கம் துறக்கமாம்.

அஃகவும் —தேயவும். கபாடம்-கதவு. துஞ்சரித்து-கண் விழித்து. துறக்கம்-சுவர்க்கம்.

# கருணை

மனநிறைவு எனக்கேது ?
என்னை நீ அவ்வாறு படைத்துள்ளாய்
அதுவே நின் திருவுள்ளம்
இயற்கையின் எழில் நடனத்திலே
குபேரப் பெருஞ் செல்வக் களிமயக்கிலே
பட்டம் பதவி மாயச் செருக்கிலே
கலையாம் இன்பத் தேன் வாரியிலே
கன்னி மதுப் பேரழகினிலே
குழந்தைத் தண்ணமுதச் சிரிப்பினிலே
புகழ் என்னும் போதையிலே
ஏதெனக்கு மன நிறைவு ?
என்னை நீ அவ்வாறு படைத்துள்ளாய்
உள்ள மங்கே ஒன்றி ஊன்றவில்லை
ஏக்கம் ஏக்கம் ஒரே ஏக்கம்
எதற்கோ ஏங்கித் தவிக்கிறது என் ஆன்மா
என்னை நீ அவ்வாறு படைத்துள்ளாய்
அதுவே நின் திருவுள்ளம்; அதுவே நின்
குறிக்கோள்
இறைவா, நின் கருணைதான் என்னே!

# தோற்றம்

அல்லியும் தாமரை அரசியும் மலர்ந்து
எல்லையில் வாருவோர் எழில்நிறை கன்னிபோல்
பொங்கும் வனப்புப் பொய்கையைக் கண்டுநான்
அங்கதன் மருங்கிலே அமைதியில் குழந்தைத்
தன்மையில் உள்ளம் தளைபடப் பொழுது
சென்றிடக் கண்டும் சிலையாய் நின்றேன்
குரலினிற் கவலையே கொழுந்திடக் கூவியே
ஒருதாய் ஆங்கே ஓடியே வந்தனள்

மைந்தனைக் காணாத் துயரது மண்டிட
வந்தவர் தமையெலாம் வருந்தியே கேட்டுத்
தேடியே வந்தனள் தென்திசைப் பொய்கையின்
கோடிய கரையினில் குறும்புதர் மறைவினில்
கண்டனள் ஆடைகள் கதறியே சாய்ந்தாள்
உண்டதோ சிறுவனை வண்டு சூழ் பொய்கையும்
வாய்பிளந் தந்தோ மகவினை விழுங்கும்
பேய்தனக் கித்தனை பெண்மையேன் பொலிவேன்?
கூற்றம் மயக்குருக் கொண்டதோ அன்றித்
தோற்றம் உண்மையைச் சொல்வதே இல்லையோ?

# இணையிலாக் காதலன்

எண்ணம் உள்ளம் எல்லாம் நிறைந்து
தண்ணளி நோக்குடன் ஒளியா தென்னை
அல்லும் பகலும் அணைத்திடக் காத்துள
எல்லையே இல்லாக் காதலன் அறிதிகொல்?
பிழையிற் பிரியான் பேதைமை முனியான்
அழகிலும் இளமை யிளைப்பிலும் முதுமை
அனைத்திலும் காதல் அளவும் குறையான்
நினைத்துனை வெறுப்போ திரிந்தவளோர் நோக்கோ
சுடுசற் குறிப்போ [illegible] இலான்
மிடிமையாம் இருளிலும் திருவளப் பொலிவிலும்
பிணியின் துயரிலும் பெருநலக் களிப்பிலும்
குணத்திலும் சீர்மை [illegible]யிலும் நலமுறன்
புடஅனல் வாழ்வினி[illegible]ற்றும் பொழுதெலாம்
திடநனி பெற்றுக் [illegible] தெளிவாய்
உருவம் நிறைந்த [illegible] அவனே
ஒருதனி யன்[illegible] யானை [illegible]லோன்

# வாழிய உலகம்

வாழிய உலகம் வாழிய அன்பறம்
வாழிய உயர்நல மாண்புகள் எல்லாம்
பொங்கும் மங்களம் எங்கும் தங்குக
புன்மையும் சிறுமையும் பொன்றியே மறைக
இன்பமும் எழிலும் கலையுடன் ஓங்குக
எம்மனோர் ஆகவே அனைவரும் வாழ்க
பஞ்சமும் பசியும் துஞ்சியே தொலைக
பார்மிசை என்றும் அமைதியே நிலவுக
உண்மையும் கருணையும் உளந்தனில் நிறைக
உன்னதக் கொள்கைசேர் வாழ்வதே மலர்க
மாநிலம் பேரின்ப வீடதாய்ப் பொலிக
மக்கள் எல்லோரும் இறையருள் பெறுக.

# நிலாப் பிஞ்சு

மின்னற் கொடியதனில் விநயமாய்த் தறித்
தெடுத்த
வன்னச் சிறுவளைவாய் மயங்கந்தி மெல்வானில்
விஞ்சைக் கனவைப்போல் வேளுக்குப் புருவில்போல்
பிஞ்சுப் பருவத்தின் பேரிய அதிசயத்தால்
அன்னை முகநோக்கும் அருங்குழவி யெனவுலகந்
தன்னை யெட்டியெட்டிப் பார்க்கும் தளிர்க்கீற்றே
காதலனைச் சந்திக்கக் கதிர்மறைவில் வந்தகன்னி
பாதைமுனை அவன்வரவை பார்த்தங்கு புதர்ச்
செறிவில்
விளையாட்டாய்ப் போயொளிக்கும் வேளையிலே
உளம்பொங்கி
முளைகாட்டும் புன்சிரிப்பை மோனவெளி நீலத்தில்
வீசிவிட்டுச் சென்றதுபோல் விளங்குகின்ற
நிலாப்பிஞ்சே.
ஆசையற்றுத் தோலுடுத்து அரவுபுனை சிவனார்க்கும்
இத்தனைபே ரெழிலுடன்நீ இருப்பதனால் சிரமணியா!
மெத்தவுமோர் பேராசைப் பித்துமெழல்
வியப்பாமோ?
சோலைமலரும் மெல்லரும்பே கவிஞனுளக் கற்பனையின

## நிலாப் பிஞ்சு

உலையொளிர வருகின்றாய் உனைக்காணும்
போதெல்லாம்
வளர்ச்சியிலும் பூரணமாம் மலர்ச்சியிலும்
புதியதொரு
தளர்ச்சியிலா நம்பிக்கை தழைத்தோங்கும்
என்னுளத்தே

விஞ்சைக் கனவைப்போல்-ஒரு மந்திரத்தால் உண்டாக்கப் பட்ட கனவைப்போல் பிறை நிலா வானில் தோன்றுகிறது. வேளுக்குப் புதுவில் போல்-மன்மதனுக்கு வில் கரும்பு; பிறை நிலா வேறொரு புதிய வில்லைப் போலக் காட்சியளிக்கிறது. பூங்குழந்தை தாயின் முகத்தை ஆச்சரியத்தோடு பார்க்கிறது; உலகத்தின் குழந்தையாகத் தோன்றிய நிலா தனது குழவிப் பருவத்திலே அந்த ஆச்சரிய உணர்ச்சியோடு எட்டிப் பார்க்கிறது. சிரிப்பு ஒரு தனி வடிவம் பெற்றது போலல்லவா பிஞ்சுமதி தோன்றுகிறது? புலித்தோல் ஆடையும் பாம்பணி களும் பூண்ட சிவனுக்கே குழவித் திங்களைத் தலையில் சூடிக் கொள்ள ஆசை உண்டாகிவிட்டது! குழவித் திங்கள் வளர் கின்றது; வளர்ந்து பூரணமாகி முழுநிலாவாக மலர்கின்றது. ஆதலால் பிஞ்சுப் பிறையைப் பார்க்கும் போதெல்லாம் நானும் வளர்ச்சியடைவேன், பூரணத்தை எய்துவேன் என்ற திடமான நம்பிக்கை பிறக்கிறது.

## [illegible]

நிலவெளி செறியிருளில்
        நித்திலத்துக் கற்பனைகள்
கோலமணி உதிர்த்துள்ளேன்
        கொள்ளைகொள்ளை வானமெலாம்—
ஏட்டுவரி அடங்காமல்
        என்னுள்ளம் பொங்கியவை
பாட்டிசையின் கரைதாண்டிப்
        பால்நிலவாய்த் தாரகையாய்
எங்குமொளி பரந்தனபார்;
        என்னுள்ளச் சதியதனில்
மங்களமும் குங்குமம்போல்,
        மல்லிகையும் மணமும்போல்
ஒன்றிவிடில் நீயறிவாய்
        மன்னிருளத் தில்லையெனும்
மறைந்துள் நடனமிடும்
        வளர்பித்தன் நானலவோ?
அங்குபார் பாழ்வெளியில்
        அரிந்துவிழும் மீனொன்று;
நக்கவொளித் [illegible]
        தனிவாடும் என்னுயிரில்
ஒருமூச்சு [illegible]
        உன்னை [illegible]

பெருமூச்சுத் தழலிடையே
    பேதுற்றுக் கண்ணுறங்கா
அவலத்தில் நோய்ந்துள்ளேன்—
    அன்புடனே வருவாயோ?
பவளத்தில் முத்தொளிரப்
    பாகுமொழி சொரிவாயோ?
காதலெனும் தேன்வெள்ளக்
    காவிரியில் இருவருமாய்
மேதினியை விண்ணாக்கி
    விளையாடிக் களிப்போமோ?

செறி-நெருக்கமான. நித்திலம்-முத்து. பேதுற்று-பித்துப் பிடித்து, அவலம்-பெருந்துன்பம். பவளத்தில் முத்தொளிர-பவளம போன்ற இதழ்களிடையே முத்துப்போன்ற பற்கள் விளங்க.

# காலவெளி

காலனெனும் உடன்பிறப்பைக்
காமஞ்சேர் மாயவனைக்
காதலித்துக் கூத்தாடும்
களிமயக்கத் தெல்லையிலே
நீலபபாழ் வெளிச்சிறுக்கி
நெஞ்சத்தி மாலையிட்டாள்
நிமிர்ந்ததடா துடிமுழக்கம்!
நெட்டுயிர்ப்போ? புன்னகையோ?
மின்னலிது தோன்றிடவே
மேகமாய் நின்றவனார்?
வெறுவெளிக்கும் காலனுக்கும்
விசையாக உள்ளவனார்?
கன்னலிலே கட்டியவன்
கன்னலின்றிக் காண்பரியான்
கணக்கறியிற் சதிராடும்
காலவெளி சூனியமே.

வெளி அல்லது இடம் என்பது ஒன்று. இதன் உடன் பிறப்பாகவே காலம் தோன்றுகிறது இவை இரண்டையும் கொண்டு பிரபஞ்சங்கள் தோன்றுகின்றன. இடத்திற்கும் அதன் உடன் விளைவான காலத்திற்கும் காரணமாக உள்ள பரம்பொருளை அறியும்போது இவை இரண்டும் சூனியமாக மறைந்து விடுகின்றன. காலன்-காலம்; காலன் மாயவன்-

## காலவெளி

காலம் என்பது மாயை. நீலப் பாழ் வெளி-இடம் இடம் காலத்தைக் காதலிக்கிறது. இவற்றின் கலவியிலே தோற்றம் ஏற்படுகிறது. துடிமுழக்கம் தோற்றத்திற்குச் சின்னம். 'தோற்றம் துடியதனில்'. துடி—டமருகம். பிரபஞ்சத்தின் தோற்றத்தைப் பரம்பொருளின் நீண்ட மூச்சாகவோ (நெட்டுயிர்ப்பு) புன்னகையாகவோ கொள்ளலாம். ஆனால் பரம்பொருளுக்கு இது மின்னல் போன்றது. தோற்றமாகிய மின்னல் உண்டாவதற்கு மேகமாக உள்ளது பரம்பொருள். அதுவே வெறு வெளிக்கும் காலத்துக்கும் விசை. கன்னல்-கரும்பு; கட்டி-வெல்லம். காலமும் இடமும் சதிராடுகின்றன. கரும்பிலே வெல்லம்போல் மறைந்து நிற்கும் பரம்பொருளின் கணக்கறிந்தால் இடமும் காலமும் சூனியமாகும். 'கணக்கறிந்தார்க்கன்றிக் காணவொண்ணாது' என்று தொடங்கும் திருமந்திரப் பாடலை (316) இங்கு சேர்த்துப் பார்க்க. இறைவன் சதிராடுகின்றானா? காலவெளி சதிராடுகின்றனவா? இறைவன் ஆடும்போது இவை ஆடித்தானே ஆகவேண்டும்? நெஞ்சத் தீ என்பதைக் காதலுக்கு அடையாளமாகக் கொள்ளலாம். அண்டங்களின் தோற்றம் உருவெடுக்காத நிலையிலே பாழ்வெளியிலே ஏதோ ஒரு சமயத்தில் விழைவொன்று உண்டாகும் அணுக்களின் சேர்க்கையாகவும் அடக்கிக் கொள்ளவேண்டும்.

# பூவிழுந்த போது

வானத்து மின்கொடியே,
வாழ்விழந்த பெண்ணமுதே!
தேனொத்த நகையிழந்து
சித்திரையில் பாட்டிழந்து
இளவேனில் புன்சிரிப்பில்
எழிற்படிவம் புதைந்து
நெளிகாந்தள் அணிவிரலும்
நெற்றியெனும் பொற்பிறையில்
கொவ்வையொளி இதழ்களிலும்
முத்தமிட்ட நாள்மறந்து
வெண்ணிலவும் தாமரையும்
விடைபெற்று விரைந்தடைந்தாய்.
முத்தாடும் பேச்செங்கே?
மோகனக்கை வீச்செங்கே?
சித்தமதில் தித்திக்கும்
தீங்கவிதைப் பார்வையெங்கே?
நிற்கின்ற நிலையினிலே
நெஞ்சள்ளும் அசைவினிலே
கற்காமல் பரதநடக்
கலைப்பெருமை காட்டிநின்
பெருவுடையார் பெருங்கோயில்
ஓவியத்துப் பெண்ணெனவந்த

உருமறைந்தே சுவர்க்குள்ளே
　　ஒளியிழந்த பாங்கினிலே,
இளமையாளம் மாறுமுன்
　　இளங்குருத்துத் தோன்றுமுன்
உளம்வாழ்வில் ஒன்றுமுன்
　　ஒருமாயக் கனவெனவே
அடுப்பறையில் மறைந்தாயே!
　　அகமடுப்பாய் எரிவாயோ?
வடிக்கண்ணை உலையாக்கி
　　வாழ்நாளே உலைநீராய்ப்
பொங்குவையோ? பொருமியுளம்
　　புடத்தீயாய் வெம்புவையோ?
மங்கியதே என்கவிக்கு
　　வளமளித்த எழில்தெய்வம்;
மலர்ப்பிரமன் விதிப்பிழையோ?
　　மக்கள்மதிக் குறைப்பிழையோ?
குலப்பெருமை குலவழக்கக்
　　குருட்டுநிலைக் கொடும்பிழையோ?
எதுவென்றே கூறிடுவேன்?
　　இன்னுயிர்க்குத் துணையாய்நீ
மதித்தன்று தேர்ந்திருந்தால்
　　வாழ்வொடியக் காரணமாம்
பெற்றோர்கள் உறவினர்கள்
　　பிழைமுடிப்புக் காகஇன்று
முற்றாத பேரெழிலின்
　　மொட்டுதிர நியாயமென்ன?

பெருவுடையார் பெருங் கோவில் ஓவியத்துப் பெண்ண ணங்கு-இராசராசன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயிலிலே மிக அழகிய ஓவியங்கள் தீட்டப் பெற்றன; அவற்றிலே எழிலே உருவான மங்கையரின் வடிவங்களும் உண்டு. அவையெல் லாம் அண்மைக்காலம் வரையில் மேலே பூசப்பட்ட சாந்திலே மறைந்து யாருக்கும் தெரியாமற் கிடந்தன வெள்ளை என்பது தூய்மையின் சின்னம்; ஆனால் இங்கு துயரத்தின் சின்னம். வீடென்னும் சிறை-வீடு என்பது விடுதலை பெற்ற நிலை யல்லவா? இங்கு வீடு என்பது சிறையாகக் காட்சியளிக்கிறது!

பேரெழிலின் மொட்டு-மலராத முகையாக இருந்த பேரழகு.

# நான் மறவேன்

எட்டியுங் கசந்திடுமோ இளந்தேன் இனித்திடுமோ
நட்டமிடும் பித்தனுடன்—என்கல் நெஞ்சே
நான் மறைந்து கூடிவிட்டால்.

நட்டமிடும் பித்தனுடன் நான்மறைந்து
கூடிவிட்டால்
எட்டியும் இளந்தேனும்—என்கல் நெஞ்சே
ஏகமாய்க் காணுதோ?

போக்குவர வில்லாத பூரணமாம் போதத்தில்
நீக்கமற நின்றபின்னர்—என்கல் நெஞ்சே
நீயேது நானேது?

நீக்கமற நின்றபின்னர் நீயுமில்லை நானுமில்லை
பார்க்கவொரு பாவையில்லை—என்கல் நெஞ்சே
பார்ப்பவனும் இல்லையன்றே?

பூரணத்துள் ஒன்றாகப் புகுந்து நிறைந்திடவே
காரணமாய்த் தோன்றிடுவான்—என்கல் நெஞ்சே
கருணையுள்ள சற்குருவே.

காரணமாய்த் தோன்றும் கருணையுள்ள சற்குருவே
ஆரணங்கள் போற்றுகின்ற—என்கல் நெஞ்சே
ஆதிமுதல் நாதனன்றே?

## நான் மறவேன்

இன்பமெனத் தோன்றித் துன்பமாம் இச்சை
யெலாம்
புன்மையெனத் தள்ளியின்றே - என்கல் நெஞ்சே
புனிதகுரு நாடாயோ?

புன்மையெனத் தள்ளியின்றே புனிதகுரு
நாடிவிட்டால்
சென்மமிது கடைத்தேறும்—என்கல் நெஞ்சே
செயம்பெற்ற வாழ்க்கையுமாம்.

அறிவொளியும் ஆகமங்கள் அத்தனையும்
காட்டுகின்ற
நெறியிதனைப் பற்றாமல்—என்கல் நெஞ்சே
நீசவழி ஆடுகின்றாய்.

நெறியிதனைப் பற்றாமல் நீசவழி ஆடுகின்ற
வெறிபிடித்த குரங்கானாய்—என்கல் நெஞ்சே
வேலெனக்குத் துணைவருமே.

தந்தைக்கு மந்திரத்தைத் தான்புகலும் ஞானசுடர்
எந்தையாம் சற்குருவாம்—என்கல் நெஞ்சே
எனக்கொளியைக் காட்டிடுவான்.

எந்தையாம் சற்குருவாம் எனக்கொளியும்
காட்டுகின்ற
கந்தனருள் மலரடியை—என்கல் நெஞ்சே
கணப்பொழுதும் நான் மறவேன்.

## நான் மறவேன்

எட்டியுங் கசந்திடுமோ இளந்தேன் இனித்திடுமோ-வாழ்க்கையின் துன்பங்களை எட்டியும், இன்பங்களை இளந் தேனும் குறிக்கின்றன. நட்டமிடும்-நடனமாடும். நான் மறைந்து-நான் மறைவாக என்பது வெளிப்படையான பொருள்; நான் என்கிற உணர்வே இல்லாமல் மறைந்து போகும்படி என்பது மற்றொரு பொருள். எட்டியும் இளந்தேனும் ஏகமாய்க் காணுதல்-வாழ்க்கையின் இன்பதுன்பங்கள் வேறு வேறாகத் தோன்றாமல் இருக்கும் சமநிலை.

# மலர்

எட்டிப் பறித்தாய் எழில்நாசி மணம் நுகர்ந்தாய்
அட்டக் கருங்கூந்தல் அணிசெய்ய வைத்துப்பின்
வீசி எறிந்தாய் மிகவாடிச் சருகாகித்
தேசு குறைந்தேன் தெருப்புழுதி மிதிபட்டேன்
என்றாலும்
மெல்விரலில் நீ தொட்ட விஞ்சையினை
எண்ணியெண்ணி
உள்வளரும் உவகையிலே உயிர்தழைக்கும்
திருவுடையேன்.

# நிலா

நிலவெனும் பெண்ணே—நானுனை
நெஞ்சினில் பதித்தேன்
கலையெலாம் திரண்டு—அமுதெனும்
கவிதையாய் நின்றாய்

முகையவிழ் மல்லிகை—சொரிந்திடும்
முறுவலின் வெண்மையாய்
பகையிருள் மயங்கிட—உலகெலாம்
பாற்கதிர் பொழிவாய்

எண்ணிலாக் கனவுகள்—உளந்தனில்
எழுப்பியே நடந்தாய்
கண்ணிலே மதுவாம்—உன்னிடம்
காதலாய் நின்றேன்

பண்ணெனும் மென்மையை—உன்முகப்
பட்டினில் உணர்ந்தேன்
தண்ணெனும் விஞ்சையைச்—சிரிப்பினில்
தந்திட மாந்தினேன்

நித்திலக் கரங்களில்—தழுவினாய்
நெஞ்சம் தழைந்தேன்
பித்தனைப் போலநான்—பிதற்றுவேன்
பேசொணா எழிலாய்.

# புத்தாண்டு

சங்கே முழங்கு

எங்குமே இன்பம்
பொங்குகின்றே —சங்கே

எங்குமே இனி நமை
எங்குமே மங்கலம்
பொங்குகின்றே
புதுநாளிதனில் —சங்கே

பழமைகள் மறைய
பொய்மைகள் மடிய
இன்மையும் நீங்க
இன்றே எழுந்தே —சங்கே

ஏழைகள் நெஞ்சமும்
சுதந்திரக் குரலிடும்
வறுமையும் பிணியும்
மாய்ந்துபோ என்றே —சங்கே

அவனியோர் விட்டம்
அனைவரும் ஒருமையாய்
புவியெலாம் இன்புறப்
புலவர்தே பாடுவோம் —சங்கே

புத்தாண்டு

சாந்தமே உலகெலாம்
தழைத்தே ஓங்குக
காந்தியம் வள்ளுவம்
கனவிலும் நிலவுக —சங்கே

இப்பாடல் அடாணா இராகத்தில் பாடுவதற்கு ஏற்றது. காந்தியம் வள்ளுவம் கனவிலும் நிலவுக-காந்தியடிகளின் கொள்கைகளும் திருவள்ளுவரின் சீரிய கருத்துக்களும் நிலவுக. அடிமனத்திலுள்ள இழிந்த உணர்ச்சிகள் கனவில் தோன்றும். அவ்வாறு இழிந்த உணர்ச்சிகளுக் கிடமான கனவிலும் உயர்ந்த எண்ணங்களே நிலவ வேண்டும்.

# காதலிக்கு மாலை

மின்னலை வான வில்லில் இழைத்தே—சுடர்
  மீன்திரள் நவமணிகள் பலநூறு கோத்து
சன்னமாய்க் கதிரவன் கம்பிகள் பின்னி—முழு
  சரத்கால வெண்ணிலாச் சரிகைகள் கட்டி
காலவெளி மாயையில் அழியாமல் என்றும்—வளர்
  கருணையாம் இறைவனின் திருநோக்க மென்னும்
மூலமுடி யிட்டுமே நிறையின்பம் கூட்டி—அலை
  மோதியே நாளெலாம் சலியாமல் பொங்கும்
காதல்தேன் ஊறிடும் உள்ளமலர் அவிழும்—மனங்
  கமழவே கனவெல்லை அமுதோடம் தாண்டி
மோதுமென் உணர்வாழி கரையிடும் இன்பம்—உயர்
  முத்தொளிர் மாலையிது மார்பில் அணிவாய்

மின்னல் பூ என்ற எனது கவிதைத் தொகுதியில் வெளியான இப்பாடல் சில மாறுதல்களோடு இங்கு இடம் பெறுகிறது. இரண்டு கண்ணிகள் புதிதாகச் சேர்ந்துள்ளன. காதலியின் மாலையிலே எத்தனை கண்ணிகளும் சேரலாமல்லவா?

கால வெளி மாயை-காலம் இடம் ஆகியவற்ருல் தோன்றும் பிரபஞ்சமாயை. இறைவனின் திருவருள் இந்த மாயைக்கு அப்பாற்பட்டது. காலவெளி என்ற கவிதையையும் நோக்குக.

# நீ

இதழுக்குப் புன்முறுவல்
இன்னிசைக்குச் சுருதிலயம்
கதிருக்குச் செங்கமலம்—என்
கண்ணுக்கு ஒளிநீயே!

கடலுக்கு முழுநிலவு
களிவண்டுக் குப்புதுப்பூ
முடிவுக்கு மனச்சாந்தி—என்
முயற்சிக்குப் பொருள்நீயே!

வீணைக்கு மென்மைவிரல்
வேய்ங்குழற்குப் பூங்காற்று
கானுக்குத் தண்பசுமை—என்
கவிதைக்கு உயிர்நீயே!

ஆன்[illegible]மக்கு நிறைகருணை
அறிவுக்குப் பேரடக்கம்
மா[illegible]க்குப் பண்பாடு—என்
வாழ்வுக்கு மணம்நீயே

ஙீ

ஆற்றுக்கு நிறைதண்ணீர்
அன்புக்குப் பெருந்தியாகம்
காற்றுக்கு இளந்தட்பம்—என்
காதலுக்கு அணைநீயே!

இதழுக்குப் புன்முறுவல்-இதழுக்கு அழகு தருவது புன்முறுவல். இதுபோலவே பிறவற்றிற்கும்ஏற்றவாறு பொருள் கொள்க.

முடிவுக்கு மனச்சாந்தி-வாழ்க்கையின் முடிவுக்கு இனிமை தருவது மனச்சாந்தி. கானுக்குத் தண் பசுமை-பச்சென்ற மரஞ்செடி கொடிகள் இல்லாத கானகத்திற்கு அழகுண்டா?

# ஓங்குக சுடர்

உள்ளத்தில் என்னவோ
ஒளிந்து நிற்குது
ஓசைப் படாமலே—அது

கள்ளத்தில் மேலெழும்
காட்டுக் குரங்கினைக்
கட்டுக்குள் வைப்பதாம்

ஐம்புல வேடர்கள்
ஆட்டக் களிப்பிலும்
அயர்வுப் போதினிலும்—சிறு

சம்புக வழிதேடித்
தாவிக் குதித்தெழும்
தாழிருட் பேய்களையே

மண்டையிற் குட்டியே
மாயக் குகைதள்ளி
வல்லிரும் பாணியிட்டு—ஒரு

கண்டமும் வாராமல்
காக்கும் சுடரது
காலத்தும் ஓங்குகவே !

அடி மனத்திலே இழிந்த இச்சைகளாகிய குரங்குகளும் பேய்களும் அழுந்திக் கிடக்கின்றன. அவை மேலெழுந்து தலை விரித்தாடச் சமயம் பார்த்துள்ளன. ஏதோ ஒன்று நமக்குள்ளே மறைவாக இருந்து அவற்றைத் தடுத்து நிறுத்துகிறது. அந்த ஒன்றின் வலிமை குறையக் கூடாது; குறைந்தால் வாழ்க்கையிலே வீழ்ச்சி காண்கிறோம். அதன் வலிமை ஓங்க வேண்டும் என்பது பிரார்த்தனை. ஐம்புல வேடர்-பஞ்சேந்திரியங்கள். சம்புக வழி குள்ளநரி தந்திரம் வல்லது. ஆகவே சம்புக வழியென்பது தந்திரமாகக் குள்ளநரி போன்று பதுங்கிச் செல்லும் வழியாகும். மாயக்குகை-அடிமனம்

# கணக்கறுமே

வீட்டுக்குள் தாய்க்குகைப்
பாட்டை மடுத்துநான்
விண்ணவரோ டுறவாடிநின்றேன் —அந்தக்

காட்டுக்குப் போவாளும்
ஓட்டினாள் தீட்டுடன் [இங்கே
காணாப்பொய்ச் சீமையில் வாடிநின்றேன்—

வீட்டையே தேடாமல்
ஓட்டைக் குடங்கொண்டு
வெட்டிநீர் எலிவளை பாயவைத்தேன்—இந்த

மாட்டுக்குப் பாசப்போய்
வாட்டங் களைந்திட
வாகனன் இந்தமு நீந்திடுமோ—சுடலை

ஆட்டத்தில் பித்தனார்
காட்டும் மயக்கத்தின்
அந்தரங்கம் உணர் ஜோதி கண்டால்—மாயப்

பாட்டுக்கு மத்தளம்
போட்டுக் குடங்கெடும்
பாவப் பிறப்புக் கணக்கறுமே !

கணக்கறுமே

தாய்க் குகை வீடு-கருப்பை. மடுத்து-உட்கொண்டு. கருப் பையிலுள்ள சிசு தேவரோடு உறவாடுவதாக நம்பிக்கை. காணுப்பொய்ச் சீமை-உலகம். ஓட்டைக் குடம். உடம்பு மாடு. மனிதப் பிறவி வாகனன்-ஜீவன். இந்தமுது-யோகிகள் கண்டின் புறும் மதியமுதம். மாயப்பாட்டு-தோற்றமாகிய மாயையாம் பாட்டு.

# அறிவிப்பு

காதலுன்மேற் காதல்
  கனல்சுரக்கும் தேனூற்று
சீதமதித் தண்ணிலவைச்
  செந்தீயாய்க் காய்ச்சியென்றன்

உடலொன்றோ உள்ளத்தும்
  உயிருடும் பாய்ச்சிடுமே
கொடிமின்னற் கொழுந் தனைய
  கொள்ளையெழில் வளர்திருவே

உன்னைமனக் கோயில்வைத்து
  ஊழித்தீ மதிலெடுத்தேன்
அன்பொழுக நீ நோக்கின்
  அக்கணமே அம்மதிலும்

அமுதமிட்ட பொற்கலசம்
  ஆகாதோ விஞ்சைபுரி
குமுதமுன்வாய்ச் சிரிப்பினுக்குக்
  கூடாத சித்தியுண்டோ

அன்னமே ஒருமாற்றம்
  அறிவிக்க நான் விழைந்தேன்
கன்னலென என்னிடத்தே
  கருணையன்பு காட்டாமல்

அறிவிப்பு

என்னை நீ இகழ்ந்தாலும்
ஏளனமாய்ப் பார்த்தாலும்
புன்மையென மதித்தாலும்
பொறித்தவுன்றன் வடிவுளத்தில்

என்றுமினி நிலைத்திருக்கும்
எரியேறும் கடைநாளும்
பொன்றாமல் வரும்பிறவி
புகுந்துனக்காய் ஏங்குவனே.

கனல் சுரக்கும் தேனூற்று-காதல் தேனூற்றுப் போன்றது; ஆனால் அதுவே கனலைச் சுரக்கின்றது. ஊழித்தீ மதில்-நீ என் உள்ளத்தில் கோயில் கொண்டிருக்கிறாய். காதல் என்னும் ஊழித்தீ அக் கோயிலுக்கு மதிலாக இருக்கின்றது. பொன்றாமல-இறவாமல்.

# மண்ணாகும் பொன்னாடாம்

கரும்பச்சைத் தழைமிடைந்த
கவின்புங்கன் புதர்க்குள்ளே
கரைந்துருகிக் கூவுகின்ற
கருங்குயிலே நீயுமுன்றன்

உள்ளத்தில் தேன்சொரிந்து
உயிருக்குத் தண்ணமுதாய்க்
கொள்ளையின்பம் கூட்டுகின்ற
காதலியைக் காணாமல்

வாடியென்னைப் போலவேதான்
வருந்திமன மொடிந்தாயோ ?
பாடுகின்ற பண்ணிலவில்
பகரவொணா வான்கிளர்ச்சி

குழைகின்ற காரணமென் ?
தமுறியெழுந் தலைந்தாடும்
அழிமனத்தின் அவலமெனும்
அனலிட்டுப் புடம்போட்டு

மெருகிட்ட பாட்டுமிதோ ?
விந்தையெலாம் விரிந்ததுவே—
உருவெலாம் நைந்திடுங்கால்
உருகுணர்ச்சிப் பரிவெல்லாம்

சுரந்திடுதல் கண்டுள்ளேன்
சோர்ந்தவுயிர் தனக்காகப்
பெருங்கனிவும் அந்நிலையில்
பிறந்திடுமென் இயல்பறிவேன் ;

ஏந்தியகை கண்டுளை வேன் ;
இறைவனடி மிகநினைவேன் ;
ஆய்ந்துனைப்போல் உளம்விரிவேன்—
அப்பரிசே எந்நாளும்

இன்பத்தும் துன்பத்தும்
எங்களுக்கே வாய்த்திருந்தால்
மன்பதையும் வாழ்ந்திடுமே
மண்ணாடும் பொன்னாடாம்.

புங்க மரம் கரும்பச்சைத் திரை போர்த்து நிற்கிறது. அதற்குள்ளே புகுந்திருந்து ஒரு குயில் கூவுகிறது. அதன் குரலிலே என்றுமில்லாத புதிய உணர்ச்சியும் கற்பனைக் கனிவும் நெளிகின்றன அதைச் செவிமடுத்தபோது உண்டான சிந்தனைகளின் விளைவாக எழுந்தது இப்பாடல். இன்பத்தில் திளைக்கும் போது மற்றவர்களின் துன்பத்திற்காகப் பரிவு ஏற்படுவதில்லை. ஆனால் எனக்கு ஏதாவது துன்பம் நேர்ந்துவிட்டபோது பரிவும், இரக்கமும், பக்தியும் மேலெழுகின்றன இந்த உயர் உணர்ச்சிகள் எப்பொழுதும் மேலோங்கி இருக்கலாகாதா? அவ்வாறு என்றும் ஓங்கியிருந்தால் மண்ணாடு பொன்னாடு ஆகிவிடும்.

பண்ணிலவில்-பண்ணாகிய நிலவு. ஏந்திய கை-பிச்சைக்காக ஏந்திய கை.

# எத்தனை இன்பமடா!

எத்தனை இன்பமடா இளமையின் எக்களிப்பு!
முத்துச் சிரிப்பவிழும் மோகனஞ்சேர் சாயலுடன்
அசைவிலே ஓரழகு அடியெடுக்கத் தனியழகு
வசியங்கள் பலகாட்டி வஞ்சி நடக்கின்ருள்—
அன்பினிலே சொக்கி அழகைப் பருகியவன்
என்ன பிறப்பிதடா இருநயனச் சாளரங்கள்
தந்த எழிற்பிழம்பின் தனியின்பம் கண்டுசொலத்
தந்தயிலா ஒருநாக்கு தத்திநலி புன்சொற்கள்
என்றவள்தன் மருங்கினிலே எடுப்பான
தோற்றமுடன்
சென்றவனைச் செவ்வேளாய்ச் சிந்தையினில்
அமர்த்தியவள்
மேதினியிற் காண்பதெலாம் விந்தையெனக்
களிப்புடனே
காதலர்கள் போகின்ருர் கண்ணுக்கு நல்விருந்து—
தெய்வீகக் காதலிது சிறுமையெலாம் துடைத்தெறி
மெய்யாக இவ்வுலகை வீடாக்கும் ஆதலினுல் [யும்
மாசிலாக் காதலுக்கு வரம்பொன்றும் கட்டாதீர்
வீசுகின்ற தென்றலைப்போல் விரிந்ததுவே
அனைத்துயிர்க்கும்

எத்தனை இன்பமடா!

பாய்கின்ற தேன்மதுவாய்ப் பரந்துலகைத் தன்
குடைக்கீழ்
ஆள்கின்ற பெருமையிலே அமைவதற்கு வழி
செய்வீர்

தந்தமிலா-எலும்பில்லாத. தத்திநலி புன்சொற்கள்-அவன் அழகைக்கூற ஏற்ற சொற்கள் இல்லை.

# பொட்டு நிலா

பொட்டுநிலாக் கீழைவானில்
வெள்ளி பொங்கவே—செக்கர்
வட்டப்பரிதி மேற்கில்நின்று
கொட்டும் தங்கமே.

பகல்செய் அரசும் மலர்வெண்ணிலவும்
சேர்ந்து பார்க்கையில்—பட்ட
அகமுருந்துளிரச் சோலைக்குயிலின்
அமுதம் எழுந்ததே.

அந்திவெள்ளி வைரமல்லி
அழகு வெடிக்கவும்—தெற்கின்
மந்தகாச மென்னப்பிஞ்சுக்
காற்றும் வந்ததே.

திசைகள்எங்கும் மயங்கும்இசையில்
தேன்துளித்திடும்—இந்தப்
பொசியும்மாய விஞ்சைபோலோர்
பொழுதும் வாய்க்குமோ ?

உலகம்சொக்கி நறவம்மாந்தி
உணர்விழந்துமே—குட்டிப்
புலவிநீங்கிக் கலவிவிழையும்
போதை கொண்டதே.

பொட்டு நிலா—

ஒருங்குசேர அரியவான
இன்பம் ஒன்றவே—இன்றென்
வரங்களாகத் தந்தகருணை
என்றும் வாழ்கவே.

கோடையிலே கிராமப் பக்கத்தில் சில நாட்களைக் கழித்தேன். அந்தச் சமயத்தில் இந்த அற்புதக் காட்சியைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது! தங்கக் கதிரவனும், வெள்ளி நிலவும் எதிர் எதிர் பார்த்து நிற்க இப்படி ஒரு காட்சி ஏற்பட்டது ஒரு வரப்பிரசாதந்தான்.

அந்தி வெள்ளி வைரத்தால் செய்த மல்லிகைபோலிருக்கிறது. மந்தகாசம்-புன்னகை.

# வேண்டும்

தென்னை இளம் பாளை—சிரித்திடும்
　　செவ்வி தவழ் நங்காய்
என்னை யுளங் கவர்ந்தாய்—இனிமேல்
　　இன்ப மெலாம் நீயே

முல்லை மலர்க் குவைபோல்—விரிந்திடும்
　　முழு நிலவு வேண்டேன்
அல்லி மல ரெனவே—திகழுமுன்
　　ஆசை முகம் வேண்டும்

வான மகளிரைப் போல்—வளர்சிறு
　　வண்ண மலர் வேண்டேன்
கானக் கவிதை துள்ளும்—உனதிரு
　　கண் மல ரேவேண்டும்

தென்றற் சிறுமி வந்தே—மெதுவாய்த்
　　தீண்டும் சுகம் வேண்டேன்
ஒன்றி யுயிர் கலந்தே—தழுவிடும்
　　உன் னருள் வேண்டுமடி

தேவர் விரும் பியுணும்—அமுதின்
　　தீஞ்சுவை நான் வேண்டேன்
ஆவல் பெருக் கிடுமுன்—இதழ்தரும்
　　அமுதம் வேண்டுமின்றே.

# தழை மறைவினில்

தழை மறைவினில் சிட்டுக்கள் வண்ணச்
சந்தங்கள் மீட்டின
சந்தங்கள் மீட்டும் படுக்கை விரல்கள்
கற்பனை மூட்டின;

இழை நரம்பினில் கந்தர்வப் பண்கள்
இன்பங்கள் காட்டின
இன்பங்கள் காட்டும் மன்மதக் கண்கள்
யாழிற்கை கூட்டின.

மெல்ல மிதந்திங்கு வந்திடும் காற்று
கந்தங்கள் தூவின
கந்தங்கள் தூவும் கொவ்வைச்செவ் விதழ்கள்
தேன்சுவை கூவின;

அல்லி மலர்ச்சிறு புன்னகைக் கொள்ளைகள்
உள்ளத்தில் மேவின
உள்ளத்தில் மேவும் கள்ள உணர்ச்சிகள்
வெள்ளத்தில் தாவின.

கவிதைக் கன்னத்துக் கிண்ணிச் சுழிகளும்
காதலைப் பேசின
காதலைப் பேசும் சிற்றெல்லை தாண்டி
எண்ணங்கள் வீசின;

அமுதத் தாரைகள் எங்கும் விழுந்துமே
ஆநந்தம் பொங்கின
ஆநந்தம் பொங்கும் அன்பின் பெருமைகள்
சிந்தையில் தங்கின.

மங்கை இளமலர் நெஞ்சில் எழுப்பிடும்
மாண்புகள் கொஞ்சமோ?
மாண்புகள் கொஞ்சும் இல்லறம் நாட்டிட
வேண்டினேன் வஞ்சமோ?

அங்கை சுருள்வதில் இன்பங்கள் பொங்கிட
அருகில் வாவெனுமோ?
அருகில் வாவெனும் வரமும் பெற்றிடில்
அண்டமும் வானமுமாம்.

# தேவி பராசக்தி அன்னை

தேவி பராசக்தி அன்னைதன்
சிந்தை மகிழ் செல்வச் சேய்கள் யாம்
மேவுமிடர்நமக் கொன்றுண்டோ
வீரி மடியினில் வீற்றுளோம் (தேவி)

முன்னைப் பழமறைச் சோதியாம்
முக்கண்ண ஞரிட பாகத்தில்
மின்னும் பசுங்கொடி யன்னவள்
விண்ணொடு பாரெலாந் தந்தவள் (தேவி)

அஞ்சும் பொருள் நமக் கில்லையே
அந்தகன் தன்னையும் சாடுவோம்
நஞ்சுங் குடித்திடப் பின்னிடோம்
நன்மை பிறருக்கங் காகிடில் (தேவி)

தீமை அவுணரை வீழ்த்தியே
தேங்கும் குருதியில் ஆடுவாள்
ஏம மெனச்சரண் பற்றினுர்
இன்பத மெய்திட நோக்குவாள் (தேவி)

அண்ட முகட்டிலும் ஏறுவோம்
அரிய செயல்பல சூழுவோம்
கொண்ட கருமம் முடிவுறக்
கோடித் தடைகளும் மீறுவோம் (தேவி)

சிங்கஞ் சுமந்திட வந்தவள்
திக்குத் திசையெலாம் ஆளுவாள்
எங்குந் துயர்மிடி நீக்குவாள்
இன்பம் மலரக்கண் நோக்குவாள் (தேவி)

# இளந்தாய்

'வருக நிலாவே, வந்தென் கண்மணிக்கு
உச்சியில் ஒரு முத்தம் கொடு'

பூங் குழந்தையை மடியில்
வைத்துக் கொண்டு தாய் கூவுகிறாள்;

அந்தி வானத்தின் மங்கிய நீலப்பரப்பில்
மாரிக்கால நிலவுப்பெண் மிதந்து வருகிறாள்;

சோலையிலிருந்து பூக்களின் மெல்லிய நறுமணம்
இருளில் பதுங்கி வருகிறது;

வீதியில் கவலையின்றிக் கோமாள மடிக்கும்
சிறுவர்கள் சிரித்து ஒலி யெழுப்புகிறார்கள்;

தூக்கங் கொள்ளாத குயில் ஒன்று
மாஞ்சோலையின் நிழல் அடுக்கத்தில்
தனிமையாகத் தனது உள்ளத்தை தப்பாடிக்
களிக்கிறது;

தொலைவிலிருக்கும் உழவனது உள்ளத்தினின்று
வெளிப்படும் குழலின் பூவோசை மீன்குயிற்றிய
வானத்தில் தாவி, அசையாத காற்றில் பரவி,
பிறகு பூமியில் பொறிவான மதாப்புப் போல
உதிர்கிறது;

தாழ்வாரத்தில் குழந்தையை மடிமேல் வைத்துக் கொண்டு தாய் இனிமையாகக் கூவுகிருள்;

'வருக நிலாவே, வந்தென் கண்மணிக்கு உச்சியில் ஒரு முத்தங்கொடு'.

நிலாவை ஒருமுறை பார்க்கிருள்: பிறகு தன் கையி லிருக்கும் இனிய அழகுத்திரளைப் பார்க்கிருள்;

நிலா அவள் அழைப்புக்குச் செவிகொடாது அமைதி யாக முறுவலித்துக் கொண்டிருக்க முடியுமா என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

குழந்தை தாய் சொல்வதைத் தானும்சொல்லிச் சிரிக் கிறது: 'நிலா நிலா வாவா!'

தாய் நகைக்கிருள்; நிலவு ஒளிரும் இரவும் நகைக் கிறது.

கவிஞனுகிய நான் அக் குழந்தையின் தந்தை; அத் தாயின் கணவன்; மறைவிலிருந்து இந்த ஒவியக் காட்சியைச் சுவைத்துக் கொண்டிருக்கிறேன்.

(துவிஜேந்திரலால் ராய் எழுதிய பாடலின் பெயர்ப்பு)

# நீங்கா இருள்

நீங்காஇருள் நெடுங்கரும்பொழுதெலாம்
தூங்காத்துளிநிறை துயர்க்கண்களே
ஆர்சொல்நம்பியே ஆர்வத்துடனே
நீரிமைமூடா நிறைதவம் செய்தீர்?
உறங்குவீராயின் ஒரு காவலரையே
செறியலைமனம் திறந்திடக்கனவில்
கண்டின்புறும் களிப்பினைப்பெறலாம்
பண்டைவினையோ பலித்திலையதுவுமே
என மருவி
நெட்டுயிர்த் துழன்று நின்றிடும்
கட்டிள மங்கையின் கடுந்துயர் பெரிதே.

# வடிநீர்க் கண்கள்

வடிநீருடன் வாடிடும்கண்களே
நொடிப்பொழுதிலும் நோய்மறந்துறக்கம்
கொண்டிடவேண்டாம் கொதித்தங்கெழும்
சண்டிக்கனவிடைத் தான்அவர்வரக்
கண்டுமேநாளைக் கடுந்துயர்மேலும்
மண்டியேவளரவும் மாழ்குமுளமே
எனவாங்கு
உறக்கமும் வெறுத்தே உருகிடும்
நிறைத்திரு மடந்தை நீள்துயர் பெரிதே.

# பொன் வண்டு

இன்பமெனும் பொன்வண்டு
கண்டவுடன் ஆங்கதனைக்
கூண்டினிலே போட்டடைத்து
மாண்டொழியச் சூழாதே:
வான்வெளியின் வண்டதுவும்
கூன்சிறையில் வாழாதே
எல்லோர்க்கும் இசைபொழியச்
சொல்லாமல் செய்திடுவாய்.
மக்களெலாம் களிகூர்ந்தால்
மிக்குயரும் மகிழ்வுனக்கே.
பொன்வண்டும் நலமோங்கும்
பொன்னுடாம் இவ்வுலகும்.

# வாழிய

வெடித்தது பெரும்புயல் வெருண்டது நெஞ்சம்
இடித்தது வானம் இருண்டது வாழ்வு
அகல்விளக் கதுவும் அணைந்தே மாய்ந்தது;
அகதியாய் நின்றே அலறினேன்: 'அந்தோ'
என்றிரு கரங்களும் ஏந்தியே, விழிநீர்
கன்றிட வெதும்பிக் காரிருளிடையே
வானினை நோக்கினேன்: 'வேகமாய் வந்து
கா'வெனக் கூவினேன்:'கருணையாய்' என்றேன்;
எங்கிருந் தோநீ வந்தனை; என்முன்
கங்குலைப் போக்கி நின்றனை; ஆகா!
இடியும் புயலும் எனக்கருள் புரியநீ
எடுத்தபே ரறத்தின் கொடியெனக் கண்டேன்.
வாழிய தருமம் வாழிய கருணை!
வாழிய உன்றன் மருள்விளை யாட்டே !

# மழை கண்ட மயில்

மழைகண்ட மயில்போலென் உள்ளம்
வளர்எண்ண மெனும்வண்ணம் பலவும்
தழைநீலம் ஒளிர்தோகை வானில்
தடையின்றித் திசைதோறும் விரிய
நாதனவன் தரிசனமே நாடி
நடனங்கள் பரவசமாய் ஆடும்;
காதலனை இதுகாறும் காணேன்,
காணுவேன் என்றாடும் உள்ளம்,
கருமேகம் ககனமிசை உருமிக்
காரிடியும் பேரிடியும் செய்யும்;
விரைமின்னல் கொடிமின்னல் மழையும்
வெளியெங்கும் நுரைகூடப் பெய்யும்;
அன்பெனுநல் வெண்புறவு கூட்டில்
அஞ்சியே நாவிழந் தடையும்;
துன்பவொலி செவிகுடையும் தவளை;
சோர்வுறு தாடுமென் உள்ளம்.

(தாகூரின் கவிதை ஒன்றைத் தழுவியது.)

## மகிழ்வேன்

இம்மியள வென்றாலும்
வளர்ந்துள்ளேன் இன்றென்றால்
வெம்பிழைகள் இழைத்தவெலாம்
பொறுத்திடலாம் ; மேன்மேலும்
வாழ்வெல்லாம் சோதனையாம்
மதிகலக்கும் நெருப்பாற்றைக்
காழ்வயிரப் பெருந்தேக்கின்
கறையானுக் கிளைக்காத
திண்மையுடன் உலகிடையே
சென்றேறும் பேராண்மை
கொண்டிருந்து புடத்தீயில்
குலையாமல் மனக்குரங்கின்
சேட்டையெல்லாம் மடைமாற்றிச்
செம்மைமெரு கேறிடவே

வீட்டுவழி நெடும்பயணம்
　　விரற்கடையில் நூற்றிலொன்று
எட்டிவைத்தா லும்போதும் ;
　　என்னுளத்தின் பண்பாடு
நெட்டுழவு பலவடித்துக்
　　கட்டியெல்லாம் தட்டிவிட்டுப்
பண்பட்ட செய்போலப்
　　பலன்தரவே மெல்லமெல்லக்
கண்ணெட்டாச் சிற்றளவில்
　　களையாமல் கோணுமல்
வந்தவழிச் சுழலாமல்
　　வழுக்கியொரே படுகுழியில்
அந்திசந்தி வீழாமல்
　　அடியிட்டால் மகிழ்வேனே.

காழ்-உரம், புடத்தீ-வாழ்வில் எற்படும் சோதனைகள். செய்-நிலம். முன்னேற்றம் சிறிதளவு நாள்தோறும் நடந்தாலும் திருப்தி கொள்ளலாம்.

# கெண்டை மீன்

கெண்டைமீன் மின்னிடக்
கண்டேன் கண்டேன்
கேணிக்குள் வாழ்க்கையும்
கண்டேன் கண்டேன்
தொண்டையா மிடிப்புலி
வாழ்வதுங் கண்டேன்
தூங்கிருள் கானகத்
துன்பமுங் கண்டேன்
நாரைநீர் நின்றிடக்
கண்டேன் கண்டேன்
நம்பிக்கை வாழ்வினில்
கொண்டேன் கொண்டேன்
நாறுமீன் போல்மடு
நனவிலிச் சிறுவாழ்வும்
கானத்திக் கொல்புலிக்
காட்டுக் கொடுவாழ்வும்
கூனிப்பேய் என்மனக்
குறையிவை என்றாலும்
நீர்மடு தனைவிட்டும்
நிலக்கறை தனைவிட்டும்
நாரைபோல் வான்வெளி
நீலத்துச் சிலவேளை

கெண்டை மீன்

ஏறிப்ப றந்தங்கே
எட்டாத கோட்டைகள்
கூறப்ப டாவின்பம்
கூட்டிடு மல்லவோ ?

மனத்தின் குறைகள் பல. நனவிலி மனமாகிய அடி மனத்தின் சிறுமைகளும் பல. மடுவிலே மீன்களைப் போல அடி மனத்தில் எத்தனை எத்தனை இழிவுணர்ச்சிகள் மறைந்துள்ளன ! மனத்தின் விலங்குணர்ச்சி இன்னும் மாறவில்லை. இருப்பினும் நாரைபோல வானில் சில சில சமயங்களில் பறந்து உயரின்பம் கூட்டுவது மனமல்லவா?

# பாட்டு

பாட்டெழுதித் தூதெனவே
பாங்குடனே நானனுப்ப
—நீயுருகிப்
பாட்டதனைப் பாடுகின்றாய்
பாட்டாக நானிருந்தால்
—தடைகடந்துன்
பவளவாய் மணந்திடுவேன்
பஞ்சணையும் நிறைந்திடுவேன்.

# சோதியே சுடரே

எங்கும் நிறைந்தெல்லை இல்லாமற் பாழ்வெளியில்
கங்குல் பகலெல்லாம் கடந்துநின்ற பேரொளியே
மருளுற்ற கண்ணுடையேன் வலிகுறைந்த
பார்வையினேன்
விரிபுவனம் தாண்டிநிற்கும் பரஞ்சோதி யான்
வேண்டேன்
மின்மினியாய் எக்காலும் என்னகத்தே நின்றிடுவாய்
இன்பத்தும் துன்பத்தும் இப்பொறியின்
சுடரொளியில்
ஆடாமல் அவியாமல் அடியிருட்டு முழுகாமல்
கோடாமல் நெறிசென்று குறிக்கோளை எய்துவனே.

# சந்திப்பு

**1**

காதலனைச் சந்திக்கக்
காட்டுவழி நான் சென்றேன்—
நெற்றியிலே சுட்டி
நீள் விழிக்கு அஞ்சனம்
காதிலே வைரம்
கன்னத்தில் நறுஞ் சுண்ணம்
கழுத்திலே பொன்மாலை
கைகளிலே மின் வளையல்
கால்களிலே பாதசரம்
கருங்கூந்தல் மலர்க்காடு
நீல வண்ணப் பட்டாடை
நித்திலத்தில் தனி மாலை
மேனிப் பொன் நிறக் கச்சு
விம்முகின்ற மார்பலம்பும்
மலர் மாலை மெல்விரலில்
மாணிக்கக் கணையாழி
காதலனைக் காணக்
காட்டு வழி நான் சென்றேன்.

**2**

அணியெல்லாம் குறைவின்றி
ஆர்வமுடன் சென்றேன்—

அழகினிலே அவருள்ளம்
ஆழ்ந்துவிடும் என மகிழ்ந்தேன்
காதலனோ வரவில்லை
கலங்கி நான் ஏமாந்தேன்
அழுதேன் நான் மனமுடைந்து
அவரையே காணமல்

3

அணிகள் எல்லாம் களைந்தெறிந்தேன்
அஞ்சனத்தைத் துடைத்தொழித்தேன்
மலர்க்காட்டைக் குலைத்தேன்
மணிப்பட்டைக் கிழித்தேன்
நாதா நாதா என்று கதறினேன்
என் தலை அலங்கோலமாகக் கிடந்தது
ஓலக்க மெல்லாம் மறைந்தது
உள்ளத்திலே காதற்கனல் பொங்கிற்று
கண்ணீர் பெருகிச் சுண்ணம் கரைந்தது
அழகெல்லாம் போயிற்று
நாதா நாதா என்று தேம்பினேன்
அவரையே எண்ணி உள்ளம் குமுறினேன்
அவர் வந்தார்.

# சத்தியம் ஒன்றே

சத்தியம் ஒன்றேயென் கையினில் ஆயுதம்
தரணியை வென்றிடத்தோள் கொட்டி
வந்துளேன்
நித்தியன் நினைவதே நெஞ்சினில் கவசம்
நேர்மையும் தர்மமும் அஹிம்சையும் அம்புகள்
அன்புதான் என்றன் பிரம்மநல் அஸ்திரம்
அதற்கெதிர் நிற்பதும் வேறெதும் உண்டோ
வன்பகை நாகமாம் மறத்தினை, அநீதியை
மாநிலத் தெங்ஙனும் நின்றிடா தோட்டுவேன்
உத்தமத் தின்பவாழ் வனைவரும் எய்தவே
ஓங்கிடும் சாந்தியின் ஆட்சியை நாட்டுவேன்
சத்தியம் ஒன்றேயென் கையினில் ஆயுதம்
தரணியை வென்றிட மார்தட்டி நின்றுளேன்.

# ஒளியைப் பார்

கடவுள் இருக்கிறார்—
மலரின் உள்ளத்தில்
குழந்தையின் புன்சிரிப்பில்
அமுதமயமான உஷையின் மலர்ச்சியில்
இவை கடவுளைக் காண்பிக்கின்றன;
அழகே அவர் உயிர்மூச்சு,
அன்பே அவர் கோயில்,
அவர் படைப்பில் உள்ள எல்லாப்பொருள்
அவர் கோயில், [களும்
என இவை நமக்குக் காண்பிக்கின்றன.
இருளுக்கு முகங்கொடாதே
எல்லையற்ற காலைஒளியைப் பார்.

(ஆங்கிலக் கவிதை ஒன்றின் தழுவல்.)

# வீர சுதந்திரம்

வீரசுதந்திரம் பெற்றுவிட்டோம்—இந்த
மேதினிமேல் நாம் தலை நிமிர்ந்தோம்
பாரத தேவியும் முகம் மலர்ந்தாள்—அவள்
பாதத்தைப் போற்றியே பாடிடுவோம்

வேதமும் கீதையும் தோன்றினவாம்—இங்கு
மெய்ந்நெறி வள்ளுவன் அருளினனும்
ஓதுமெய்ஞ் ஞானநுண் கலைகளெல்லாம்—எங்கும்
ஒப்பிலா தோங்கிய நாடிதிலே

ஆயிரம் ஆண்டுகள் மாசடைந்தோம்—நல்ல
ஆர்வமும் முயற்சியும் தேய்வடைந்தோம்
போயினநாளெலாம் போயொழிக—இனிப்
புதியதோர் பாரதம் செய்திடுவோம்

காவிரி கங்கைபோல் பெருகிவரும்—எங்கள்
கண்மணி நாடிதன் பண்பினிலே
யாவரும் நின்றுமே உலகமெலாம்—இன்பம்
மேவிட நல்லறம் ஓதிடுவோம்

காந்திமகான் சொன்ன சாந்தவழி—இந்தக்
காசினி மேலெங்கும் நிலைபெறவே
மாந்தர்கள் யாவரும் தோழர்களாய்—அன்பு
வாழ்வினில் நின்றிடப் பணிபுரிவோம்.

# ஓ மீகாமா

ஓ மீகாமா
சாந்தி என்னும் பரந்தகடல் என்கண்முன்பு தோன்று
இத்தோணியை அதில் மிதக்க விடு. [கிறது

என்னை என்றும் பிரியாத தோழா
உன்மடியில் என்னை வைத்துக் கொள்
காலமென்னும் முடிவற்ற எல்லையற்ற பாதையில்
துருவதாரகை தனது ஒளியைப் பொழிக.

வீட்டின்பம் நல்கும் அருளாளா
உனது கருணையும் பேரன்பும்
எனது இறுதி யாத்திரைக்கு வேண்டிய
வற்றாத செல்வமாக இருக்கட்டும்.

உலகத் தளைகள் அறுபடுக
அகிலாண்டம் தனது கரங்களில்
என்னை அணைத்துக் கொள்ளட்டும்

அறிவுக் கெட்டாத பரஞ்சுடர் முன்பு
அச்சமின்றி நிற்க எனக்கு வன்மை அருள்வாயாக!

(தாகூரின் கவிதையை அடியொட்டி எழுதியது.)

# எழு கடலும்

எழுகடலும் வற்றிடினும் என்காதல் வற்ருது
அழிவறியா உயிருற்றென் றன்றுரைத்து மருங்
கணைந்தார்
போனதிசை நானறியேன் புதுப்புனலில் புகுந்தாரோ
வானவில்லுப் பேச்சழகர் மறைவதிலும் அது
வானுர்—
குடியல்ல குலமல்ல குணங்கெட்டேன்; இனிக்
கெடவோர்
படியுண்டோ? பாலையெனப் பச்சையுளம்
தீய்ந்தழிவேன்;—
நயப்புரையில் வீழாத நன்மதியும் நெஞ்சுரமும்
அயர்வறியா நிறைத்தெளிவும் அழகெனவும்
அணியெனவும்
கொண்டிருந்தால் என்வாழ்வு குலைந்திடுமோ?
பட்டிமனச்
சண்டியினல் பீடழிந்தேன் சாவொன்றே
இனிவாழ்வாம்.

# அழகும் அன்பும்

அழகுடையாள் என்றுரைத்தீர் அன்புள்ளம்
உடையாளோ?

அழகைநான் கண்டதில்லை அன்பில்லாத்
தோற்றத்தில்—

காமனுமே கண்மயங்கும் கட்டழகும் உள்ளமதில்
தாவியெழும் கருணையன்புத் தண்சுடரில் தோயாத
இருள்செறிகா னென்றிடிலோ ஏதுபயன்? ஏதின்பம்?
மருள் விழியும் கனியிதழும் மனம்சுரக்கும்
அன்பினிலே

மலர்ந்தறியாப் புன்முகத்தில் வாழ்வுதரும்
அழகுண்டோ?

புலர்ந்தவுடன் கரந்துறையும் புலிவடிவம்
நன்றெனினும்

கொடுமையினுல் அதன்செவ்வி குறைபட்ட
தறியோமோ?

நெடும்பிறவிப் பிணிமாற்றும் நிலையன்பே
அழகாமால்.

அன்பே உண்மையான அழகு தருகின்றது. புலர்ந்தவுடன்-பொழுதுவிடிந்ததும். கரந்துறையும்-மறைந்து வசிக்கும். செவ்வி-அழகு.

# காதல் அனல்

காதல் அனல் தேனைக்
கண்டு பருகிடவே
மாதரசே செய்தாய்
மதுரம் உன் வடிவம்

அன்பு வறுமையில்நான்
அல்லலுறும் போதும்
துன்பக் கடலினிலே
சுழலும் போதினிலும்

இன்பத்துளி ஒரு கால்
என்னுடல் தீண்டிடினும்
எந்தக் கணமும் அது
இதயம் நீங்காதடி

வெந்து மடிந்த பின்பு
மேவும் பிறவியிலும்
சிந்தை தனிற் பொறிப்பேன்
திண்ணம் அழியாதே

# வேல்

வேல்வேல் வேலென்று சொல்லு—பழ
வெவ்வினையை இக்கணமே கொல்லு
வேல்வேல் வேலென்று சொல்லு—மிகு
வெற்றியுடன் வாழ்வினிலே நில்லு

வேல்வேல் வேலதுவே சக்தி—அதை
வேண்டிப் பெறும்வழியே பக்தி
வேல்வேல் வேலதுவே ஞானம்—அதன்
மேன்மை உணர்ந்தநிலை மோனம்

வேல்வேல் வேலென்று சொல்லு—வளர்
வீரசக்தி யாலெதையும் வெல்லு
வேல்வேல் வேலென்று சொல்லு—ஞான
வேலினருள் ஜோதிவாழ்வில் நில்லு

நீலமயில் ஏறிவரும் வேலன்—அன்னை
நீலியுமை தந்தசுடர் பாலன்
சீலநெறி நின்றவன்தன் பாதம்—துதி
செய்தவுடன் தந்தருள்வான் போதம்

குன்றுதொறும் ஆடும்முரு கேசன்—நம்
குறைகளைப் போக்கும்வள்ளி நேசன்
என்றுமவன் நீண்டபுகழ் பாடு—உனக்
கிங்கொருவர் இல்லைஇல்லை ஈடு

வேல்வேல் வேலென்று சொல்லு—இனி
மேலுனக்குத் துன்பமேது சொல்லு
வேல்வேல் வேலென்று சொல்லு—இன்ப
வீட்டுநிலை பெற்றுவாழ்வில் நில்லு.

# ஓடக்காரன்

"அரியதோர் ஓடம் செலுத்திடும் அன்பனே
பரிவுடன் என்முகம் பார்த்து நீ அதனில்
ஏற்றியே அக்கரை சேர்க்கவும் இசைவாய்."
"வேற்றுவா கனங்கள் மிகப்பல உளவே?"
"அவையெலா மேறிநான் அலுத்தனன் ஆற்றினைத்
தவறிலா திம்முறை தாண்டவே விழைந்தேன்."
"உறுதியாய் நின்றால் உதவிடும் ஓடும்;
வருகநீ யானும் மகிழ்ந்தனன் உள்ளம்."
"எத்தனை எத்தனை இன்பமீன் இங்கே !
மெத்தக் களிதரும் வேடிக்கை எத்தனை!
சற்றுநான் ஆற்றில் தாவியே திளைப்பேன்."
"பற்றிடச் சூழ்ந்து பதுங்கிடும் வஞ்சக
மாயைகள் அறியாய் மனம்பறி கொடுத்துத்
தாயகம் சேரும் எண்ணமும் தவிர்வையோ?"
"தோணியிற்பலவாய்த் தொளைகளும் தோன்றின.
காணவும் கூசினேன் கலக்கியே வெள்ளம்
பாறையில் மோதிடப் பகரொணாத் தொல்லைகள்
மீறிய தந்தோ வேதனை பொறுக்கிலேன்."
"இவையெலா முன்றன் இச்சையின் விளைவே

சுவையிலா இன்பம் சுவையெனக் கொள்ளேல்."
"தத்தளித் தோடம் தளர்ந்ததே, ஐயகோ!
மெத்தவும் பயந்தேன் வேறினிச் செய்வதென்?"
"ஊன்றுகோல் என்றனை உறுதியாய்ப்பற்றுவாய்."
"ஈன்றதாய் போலவே என்னையும் காத்து
அன்புடன் ஓடம் செலுத்திடும் ஐயனே,
உன்னுடை வாழ்க்கை உரைப்பாய் எனக்கே;
உற்றார் உறவினர் ஊருடன் பேரும்
நற்றாய் தந்தையர் நலம்பிற வெல்லாம்
அறிந்திடப் பெரிதும் ஆர்வமாய் உள்ளேன்."
"மறந்தனை என்னை நீ ; மற்றுமோர் ஊரும்
பேரும் எனக்கிலை; பித்தராய்ப் பலரும்
ஊருடன் பேரும் ஒன்றல இரண்டல
ஆயிரம் கூறுவர்; அவையெலாம் பொய்யே."
"தாயும் தந்தையும் சாற்றிட வில்லையே?"
"என்னைப் பெற்றோர் யாருமே இல்லை;
என்றுமே யானும் பிறந்ததும் இல்லை."
"பித்தமோ விகடப் பேச்சிதோ அறியேன்
கைத்தலம் பிடித்த காதலி யாரோ?"
"பித்தனே யானும் ; பெண்மணி நீயென்
உத்தமக் காதலி உணர்ந்திலை இன்னுமோ?"
"கரத்தினை மெல்லவே தீண்டிய கணத்தில்
வருத்திய இருள்திரை மாயமாய் விலகிட
ஓடமும் யாறும் ஒன்றையும் காணேன்;

ஓடக்காரன்

வேடமாய்க் கனவாய் விளைந்தன வாழ்வினில்
உணர்ந்தேன் உண்மையை ஒப்பிலாத் தலைவ
குணஞ்சிறி தில்லேன் குறைகளே நிறைந்தேன்
என்னினும் ஏழையை அருளுடன் ஏற்றீர்
மன்னிய இன்பமாம் வானகங் கண்டேன்."

## துரிய நிலை

சூரியனில்லை சோதியுமில்லை
சுந்தரமானதோர் திங்களுமில்லை
சாரும் நிழலெனச் சூனியத்துள்ளே
சராசரமெல்லாம் மிதந்தனவே
அஸ்புடமான மனமெனும்வானில்
அகிலமு மொன்றாய் மிதக்கையிலே
அகமெனும் வெளியில் நிரந்தரமாக
அமிழ்ந்திடும் பின்னர்எழுந்திடுமே
முடிவினில்மெதுவாய்ச் சாயைகளெல்லாம்
மகாலயமொன்றில் கலந்தனவே
துடித்திடுவதுநான் நானெனும்உணர்வே
சிறிதும்வேறில்லை துடிப்பிதையல்லால்
உணர்வுதானிதுவும் சூனியத்துள்ளே
சூனியமாகவே ஒன்றியதே
உரைமனங்கடந்த துரியமாம்நிலைஇதைச்
சேர்ந்தவரேதா னுய்த்தறிவார்.

சுவாமி விவேகாநந்தர் தமது அநுபவத்தால் கண்ட பேருண்மையை விளக்கி எழுதிய பாட்டின் பெயர்ப்பு.